இந்திய உச்ச நீதிமன்றம்

2022-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்
மற்றும்
மாண்புமிகு நீதியரசர் திரு. விக்ரம் நாத்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 6406-6407/2010

காட்டுகண்டி எடத்தில்
கிருஷ்ணன் மற்றும் ஒருவர்
... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

காட்டுகண்டி எடத்தில்
வல்சன் மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

சாட்சியச் சட்டம், 1872 (1/1872), பிரிவுகள் 114, 101 முதல் 103 வரை - திருமணம் குறித்த அனுமானம் - மெய்ப்பிக்கும் பொறுப்பு - முடிவு, ஓர் ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக நீண்ட காலமாகச் சேர்ந்து வாழும்போது, அனுமானம் மணவாழ்க்கைக்கு சாதகமாக இருக்கும் - திருமணம் குறித்த சங்கதியை எதிர்த்துரைப்பவரின்மீது பெரும் பொறுப்பு அமைவுறும் - திருமணத்திற்கு ஆதரவாக வாதியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், தரப்பினர்களுக்கிடையே பிரச்சினைகள்

எழுவதற்கு முன்னரே நீண்டகாலமாக இருந்துவருகின்றன - நீண்ட காலமாக கணவன் மனைவியாகச் சேர்ந்து வாழ்ந்ததை வாய்மொழி மற்றும் ஆவணச் சான்று நிலைநாட்டுகிறது - பிரதிவாதி, திருமணத்திற்குச் சாதகமான அனுமானத்தை மறுத்துரைக்கத் தவறிவிட்டார்.

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 (5/1908), கட்டளை 20, விதி 18 - பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்கு - இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகள் - தொடங்குவது குறித்து - இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்கப்படும்போதுதான் உரிமை வழக்கு முடிவுக்கு வரும் - விசாரணை நீதிமன்றத்தால் முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கப்பட்டுவிட்டால், நீதிமன்றம் இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளைத் தன்னிச்சையாகவே மேற்கொள்ளவேண்டும் - இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளைத் தனியாக தாக்கல் செய்யவேண்டிய அவசியமில்லை - விசாரணை நீதிமன்றம் கட்டளை 20, விதி 18-இன் கீழ் நடவடிக்கைகள் எடுப்பதற்கு வழக்கினைப் பட்டியலிடவேண்டும், மேலும் வழக்கினை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கக்கூடாது - இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்குமாறு அதே உரிமை வழக்கில் உரிய விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் அனுமதிக்கப்படவேண்டும் - பாகப்பிரிவினைக்காகவும், தனிப்பட்ட உடைமைக்காகவும் முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கப்பட்ட பின்னர், விசாரணை நீதிமன்றங்கள் தனித்தனி வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்கும்படி வேண்டுறுத்தாமல், கட்டளை 20, விதி 18-இன் கீழ் நடவடிக்கைகள் எடுப்பதற்காக தன்னிச்சையாகவே உடனடியாக வழக்கினைப் பட்டியலிடவேண்டும் என உத்தரவிடப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்:

1. ஆண்ட்ராஹென்னிடிச் டைனோஹமி -எதிர்- வைஜிதுங்கே லியானாபடாபென்டிச் பாலாஹமி, ஏ.ஐ.ஆர். 1927 பி.சி. 185. (பத்தி 16)
2. பத்ரி பிரசாத் -எதிர்- டெபுடி டைரக்டர் ஆஃப் கன்சாலிடேஷன், 1978 (3) எஸ்.சி.சி. 527. (பத்தி 18)
3. பிமல் குமார் -எதிர்- சகுந்தலா தேபி, 2012 (2) சி.டி.சி. 881 (எஸ்.சி.). (பத்தி 31)
4. செல்லம்மா -எதிர்- திலகா, 2009 (9) எஸ்.சி.சி. 299. (பத்தி 20)
5. இந்திரா சர்மா -எதிர்- வி.கே.வி. சர்மா, 2014 (1) எம்.டபிள்யூ.என். (சி.ஆர்.) 481 (எஸ்.சி.). (பத்தி 20)
6. மதன் மோகன் சிங் -எதிர்- ரஜினி காந்த், 2010 (5) சி.டி.சி. 503 (எஸ்.சி.). (பத்தி 20)
7. மொஹாபத் அலி கான் -எதிர்- முகமது இப்ராஹிம் கான், ஏ.ஐ.ஆர். 1929 பி.சி. 135. (பத்தி 17)
8. எஸ்.பி.எஸ். பாலசுப்ரமணியம் -எதிர்- சுருட்டையன் என்கிற ஆண்டாளி படையாச்சி, 1994 (1) எஸ்.சி.சி. 460. (பத்தி 19)
9. ஷப் கரண் பூப்னா -எதிர்- சீதா சரண் பூப்னா, 2009 (9) எஸ்.சி.சி. 689. (பத்திகள் 31, 32)
10. துல்சா -எதிர்- துர்காதியா, 2008 (1) சி.டி.சி. 773 (எஸ்.சி.). (பத்தி 20)

வழக்குரைஞர்கள்:

திரு. வி. சிதம்பரேஷ்,
மூத்த வழக்குரைஞர். ... மேல்முறையீட்டாளர்களுக்காக

திரு. ஆர். பசந்த்,
திரு. வி. கிரி,
மூத்த வழக்குரைஞர்கள்.

... எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்:

1. மேல்முறையீடு வழக்கு எண் 102/1996 (மே) மற்றும் மேல்முறையீடு வழக்கு எண் 107/1996-இல் எர்ணாகுளத்தில் உள்ள கேரள உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 5.2.2009-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையிலிருந்து தற்போதைய மேல்முறை-யீடுகள் எழுகின்றன; அதன்மூலம் உயர் நீதிமன்றம் விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பாகப் பிரிவினைக்கான தீர்ப்பாணையை நீக்கறவு செய்து மேல்முறையீடுகளை அனுமதித்தது.

2. மேல்முறையீட்டாளர்களே வாதிகளாவர், காட்டுகண்டி எடத்தில் கருணாகரன் என்பவர் பிரதிவாதி ஆவார். அவர் உரிமை வழக்கு நிலுவையில் இருந்தபோது மரணமடைந்தார்; ஆகவே, அவரின் சட்டப்படியான பிரதிநிதிகள் 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளாகப் பதிவில் கொண்டுவரப்பட்டுள்ளனர். வசதியின்பொருட்டு, தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் வரிசைப்படுத்தப் பட்டவாறே குறிப்பிடப்படுகின்றனர்.

3. வழக்குச் சொத்து, காட்டுகண்டி எடத்தில் கனரன் வைத்தியர் என்பவருக்குச் சொந்தமானது; அவருக்கு தாமோதரன், அச்சுதன், சேகரன், நாராயணன் ஆகிய நான்கு மகன்கள் இருந்தனர். தாமோதரனுக்கு சிறுத்தகுட்டியுடனான திருமணப் பந்தத்தில் பிறந்த மகனே

முதல் வாதி ஆவார்; இரண்டாம் வாதி முதல் வாதியின் மகனாவார். அச்சுதனுக்கு கருணாகரன் என்னும் பெயருடைய ஒரு மகன் இருந்தார்; அவர் பிரதிவாதிகளின் உரிமை முன்னவராவார். சேகரன் திருமணமாகாதவர், அவர் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார். நாராயணன், லட்சுமி என்பவரை மணந்தார்; அவர்களுக்கு ஜானகி என்ற மகள் இருந்தார், அவரும் கன்னிப்பெண்ணாகவே இறந்துவிட்டார் என உரிமை வழக்கில் வாதிகள் வாதிட்டனர். வாதிகள் வழக்கு அட்டவணைச் சொத்தில் பாதிப்பங்கினைக் கோரினர்.

4. அச்சுதனைத் தவிர, மற்ற அனைத்துப் பிள்ளைகளும் திருமணமாகாமல் இறந்துவிட்டனர் என்பதும், கருணாகரன் அச்சுதனின் ஒரே மகனாவார் என்பதும் பிரதிவாதிகளின் வழக்கு விவரமாகும். தாமோதரன், சிறுத்தகுட்டி என்பவரை மணமுடித்தார் என்பதும், முதல் வாதி அத்திருமணப் பந்தத்தில் அவர்களுக்குப் பிறந்த மகன் என்பதுமான வாதிகளின் வாதுரையை அவர்கள் மறுத்தனர். மேலும், சிறுத்தகுட்டி தாமோதரனின் மனைவியல்ல என்பதும் அவர்களின் வாதமாகும். ஆகவே, வாதிகள் வழக்கு அட்டவணைச் சொத்தில் எந்தப் பங்குக்கும் உரிமையுடையவர்களல்லர் என வாதுரைக்கப்பட்டது.

5. விசாரணை நீதிமன்றம், தரப்பினர்களின் வாதுரைகளை அடிப்படையாகக்கொண்டு, தொடர்புடைய எழுவினாக்களை வனைந்தது. விசாரணை நீதிமன்றம் பதிவிலுள்ள சான்றினை ஆராய்ந்ததன்பேரில், தாமோதரன் சிறுத்தகுட்டியுடன் நீண்டகாலமாக இணைந்து வாழ்ந்து வந்தார் என்றும், அவ்வாறு இணைந்து வாழ்ந்ததன் காரணமாக தாமோதரன் சிறுத்தகுட்டியை மணமுடித்திருந்தார் என்றும், முதல் வாதி அவ்வாறான திருமணப் பந்தத்தில் பிறந்த மகன் என்று முடிவு செய்யப்படலாம் என்றும் தீர்மானித்தது.

விசாரணை நீதிமன்றம், அதன்படி வழக்குச் சொத்தினை இரண்டு பாகங்களாகப் பிரிப்பதற்கான முதல்நிலைத் தீர்ப்பாணையை வழங்கியது. மேலும், அப்பங்குகளில் ஒன்று வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது.

6. மேற்படி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையால் மனக்குறையுற்று முதல் பிரதிவாதி மே.வ. எண் 102/1996 எனும் ஒரு மேல்முறையீட்டையும், மற்ற பிரதிவாதிகள் மே.வ. எண் 107/1996 எனும் மற்றொரு மேல்முறை-யீட்டையும் உயர் நீதிமன்றத்தின் முன்பாகத் தாக்கல் செய்தனர். வழக்கு குறித்து விவாதிக்கையில், முதல் வாதி, சிறுத்தகுட்டியின் மூலமாக தாமோதரனுக்குப் பிறந்திருந்தால், அவர் முறைதவறி பிறந்த குழந்தையாகவே இருக்கமுடியும் எனும் மற்றொரு வாதம் பிரதிவாதிகளால் முன்வைக்கப்பட்டது. தாமோதரனுக்கும், சிறுத்தகுட்டிக்கும் இடையேயான திருமணம் நிரூபிக்கப்படாதவரையில் வாதிகள் கூட்டுப் பங்குரிமைச் சொத்தின்மீது உரிமை கோரமுடியாது. பிரதிவாதிகளின் இந்த வாதம் அந்தளவிற்கு சாரமின்றி உள்ளது, மேலும், பிரதிவாதிகளால் விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக அத்தகைய வாதம் ஏதும் முன்வைக்கப்படவில்லை.

7. உயர் நீதிமன்றம் பதிவிலுள்ள சான்றினை மதிப்பீடு செய்ததன்பேரில், முதல் வாதி, தாமோதரனின் மகன் என்று தீர்மானித்தது. எனினும், தாமோதரன் உண்மையில் சிறுத்தகுட்டியை மணமுடித்தார் என்பதை நீதிமன்றத்தின் முன்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் காண்பிக்கவில்லை; மேலும், தாமோதரனுக்கும் சிறுத்தகுட்டிக்கும் இடையில் ஏற்கெனவே செல்லத்தக்க திருமணப் பந்தம் இருந்ததற்கான அனுமானமும் எழவில்லை. முதல் வாதியின் நிலையானது முறைதவறிப் பிறந்த குழந்தை என்பதே உயர் நீதிமன்றம்

கருத்துரைத்தது. அவ்வாறிருக்கையில், தாமோதரனுக்கும் சிறுத்தகுட்டிக்கும் இடையிலான திருமணம் செல்லாதது என்பதால், வாதிகள் கூட்டுப் பங்குரிமைச் சொத்தின் பங்குக்கு உரிமையுடையவர்களல்லர். இந்த முடிவின் அடிப்படையில் உயர் நீதிமன்றம், வழக்கினை மீண்டும் பரிசீலிப்பதற்காக விசாரணை நீதிமன்றத்திடம் ஒப்படைத்தது. விசாரணை நீதிமன்றம், திருமணம் குறித்த வாதத்தைப் பரிசீலனை செய்வதற்காக கூடுதல் சான்றினை முன்வைக்கவும், தேவைப்பட்டால், வாதுரைகளில் திருத்தம் செய்வதற்கும் தரப்பினர்களை அனுமதித்தது.

8. வாதிகள், மேற்படி மீட்டனுப்புகை ஆணையை இந்நீதிமன்றத்தின் முன்பாக எதிர்த்துரைத்தனர்; இந்நீதிமன்றம், பதிவிலுள்ள சான்றின் அடிப்படையில் மேல்முறையீடுகளைத் தீர்வு செய்ய உயர் நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டு, மீட்டனுப்புகை ஆணையை நீக்கறவு செய்ததன் மூலம் மேல்முறையீடுகளை அனுமதித்தது.

9. அதன்பின்னர், உயர் நீதிமன்றம் மேல்முறை-யீடுகளைக் கேட்டறிந்ததுடன், முதல் வாதியின் தந்தைக்கும் தாய்க்கும் இடையேயான நீண்டகால உடனுறைதலை மெய்ப்பிக்க சான்றேதும் இல்லை என்றும், மேலும், முதல் வாதி, தாமோதரனின் மகனாக இருந்தாலும், அவர் சட்டப்படி பிறந்த மகனல்ல என்று ஆவணங்கள் நிரூபிப்பதால், சொத்தின் பாகப்பிரிவினையை மறுப்பதாகத் தீர்மானித்து, மேல்முறையீடுகளை அனுமதித்தது. மேற்கண்டவாறு உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்புரை இம்மேல்முறையீடுகளில் எதிர்த்துரைக்கப்படுகிறது.

10. மேல்முறையீட்டாளர்கள்-வாதிகளுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. வி. சிதம்பரேஷ் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்கள்-பிரதிவாதிகளுக்கான

கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஆர். பசந்த் மற்றும் திரு. வி. கிரி ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டறிந்தோம்.

11. தாமோதரன், முதல் வாதியின் தந்தை என்பதையும், சிறுத்தகுட்டி தாமோதரனின் மனைவி என்பதையும் வாதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட பெருந்தொகுப்பு ஆவணங்கள் காண்பிக்கின்றன; அவர்களின் திருமணம், உரிமை வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு 50 ஆண்டுகளுக்கு (தற்போது 90 ஆண்டுகள்) முன்னர் நடைபெற்றுள்ளதால், அவர்களின் திருமணம் தொடர்பான ஆவணச்சான்று ஏதும் இருப்பதற்கான சாத்தியமில்லை என திரு. வி. சிதம்பரேஷ் வாதுரைத்துள்ளார். வாதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு ஆவணங்களின்மீது அவர் எங்களது கவனத்தை ஈர்த்தார், அதில், கணவர் வீட்டாரிடமிருந்து சிறுத்தகுட்டிக்கு அவ்வப்போது பணம் கொடுக்கப்பட்டு வந்ததற்கான குறிப்புகள் உள்ளன. அவர், அவரது வாதத்திற்கு ஆதரவாக வாதிகள் மற்றும் வாதிகளின் சார்பாக விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்திற்கும் எங்களது கவனத்தை ஈர்த்தார். மேலும், வாதிகளால் முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்கள், தரப்பினர்களுக்கிடையே ஏதும் பிரச்சினைகள் எழுவதற்கு வெகுகாலத்திற்கு முன்பிலிருந்தே இருந்துவந்தன எனவும் வாதிடப்பட்டது. முதல் வாதியானவர், தாமோதரன் மற்றும் சிறுத்தகுட்டியின் மகன் என்பதை இந்த ஆவணங்கள் தெளிவாகக் காண்பிக்கின்றன என்பதோடு தாமோதரன் திருமணமாகாமலோ அல்லது சட்டப்பூர்வமான மகன் இல்லாமலோ இறந்துவிட்டார் என்ற பிரதிவாதிகளின் வாதம் நம்பவே முடியாததாகும். சட்டமானது, முறைதவறி பிறந்தவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கான சட்டப்பூர்வமான நிலையை அறிவிப்பதற்கு ஆதரவாக உள்ளதாகவும் வாதுரைக்கப்பட்டுள்ளது. ஓர் ஆணுக்கும்

பெண்ணுக்கும் இடையேயான நீண்டகால உடனுறைதல் என்பது அவர்களின் திருமணம் குறித்த அனுமானத்தை எழுப்பும்; அத்தகைய உறவுமுறையில் பிறந்த குழந்தைகள் முறைப்படி பிறந்தவர்களாகவே கருதப்படுவர். இந்திய சாட்சியச் சட்டம், 1872, பிரிவு 114-இன்படி எழுப்பப்பட்ட அத்தகைய அனுமானம் மறுதலிக்கத்தக்கதாக இருந்தபோதிலும், விசாரணை நீதிமன்றத்தால் சரியாகத் தீர்மானிக்கப்பட்டவாறு, தற்போதைய வழக்கில் இந்த அனுமானத்தை மறுதலிப்பதற்கு பிரதிவாதிகள் பயனுள்ள சாட்சியம் எதனையும் முன்னிலைப்படுத்தவில்லை எனவும் வாதிடப்பட்டுள்ளது.

12. இதற்குமாறாக, பிரதிவாதிகளுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர்கள் திரு. ஆர். பசந்த் மற்றும் திரு. வி. கிரி சமர்ப்பித்ததாவது, தாமோதரன், சிறுத்தகுட்டியை மணமுடிக்கவில்லை; மேலும் முதல் வாதி, தாமோதரனின் சட்டப்படியான மகனல்ல. இப்பிரச்சினை தொடர்பாக, உறுதியான சான்றினை முன்கொணர்வது இனி சாத்தியமில்லை என்ற நிலையில், உரிமை வழக்கு வேண்டுமென்றே காலதாமதமாகத் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. சிறுத்தகுட்டியின் வாழ்நாளின்போது பாகப்பிரிவினை குறித்த கோரிக்கை எதுவும் முன்வைக்கப்படவில்லை. திருமணம் குறித்தோ, நீண்டகாலமாக சேர்ந்து வாழ்ந்தது குறித்தோ ஏதொரு சான்றும் இல்லை என்றும், மேலும், வா.சா.ஆ.3-ஐ தவிர, வாதிகளால் சார்வுறப்பட்ட அனைத்து ஆவணங்களும் தாமோதரனின் மறைவுக்குப் பின்னர் கொண்டுவரப்பட்ட ஆவணங்களே என்றும் வாதிடப்பட்டது. வா.சா.ஆ.3-ங்கூட, தாமோதரனுக்கும் சிறுத்தகுட்டிக்கும் இடையேயான திருமணத்தை/நீண்டகால உடனுறைவை மெய்ப்பிக்கவில்லை என்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது. வாதிகள் கறைபடியாத கைகளுடன் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது. ஆகவே,

நீதிமன்றம் அவர்களுக்கு ஆதரவாக சலுகையேதும் காட்டக்கூடாது. அதன்படி பிரதிவாதிகள், மேல்முறை-யீடுகளைத் தள்ளுபடி செய்ய வேண்டுரைத்தனர்.

13. நாங்கள், தரப்பினர்களுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர்களால் வழக்காடுமன்றத்தில் வைக்கப்பட்ட பணிந்துரைகளைக் கவனமாகப் பரிசீலித்ததுடன், பதிவில் முன்வைக்கப்பட்ட சான்றாதாரங்-களையும் நுண்ணாய்வு செய்தோம்.

14. வழக்குச் சொத்து, காட்டுகண்டி எடத்தில் எனும் குடும்பத்திற்குச் சொந்தமானது என்பதில் பிரச்சினை இல்லை, அது மிதாக்ஷரா வாரிசுரிமைச் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படுகிற கோழிக்கோட்டின் தியா குடும்பத்தைச் சார்ந்ததாகும். மேற்படி சொத்தானது முதலில் காட்டுகண்டி vl j j py; f d ud; i t j j pah; vd gt Uf Fhpaj hFk; அவருக்கு தாமோதரன், அச்சுதன், சேகரன் மற்றும் நாராயணன் எனும் நான்கு மகன்கள் இருந்தனர். அச்சுதன், கல்யாணியை மணந்தார், அவர்களுக்கு கருணாகரன் (1-ஆம் பிரதிவாதி) என்ற மகன் இருந்தார் என்றும், கருணாகரன், உமாதேவியை (3-ஆம் பிரதிவாதி) மணந்தார்; அவர்களுக்கு வல்சன், கஸ்தூரி மற்றும் சரஸ்வதி பாய் (முறையே 2, 4 மற்றும் 5-ஆம் பிரதிவாதிகள்) எனும் மூன்று குழந்தைகள் இருந்தனர் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. சேகரனும் நாராயணனும் திருமணம் செய்துகொள்ள-வில்லை. தாமோதரன், சிறுத்தகுட்டி என்பவரை மணந்து-கொண்டார் என்றும், அவர்களுக்கு கிருஷ்ணன் (1-ஆம் வாதி) எனும் பெயருடைய மகன் உள்ளார் என வாதிகள் வாதுரைத்துள்ளனர். எனினும், தாமோதரன் சிறுத்தகுட்டியை திருமணம் செய்துகொள்ளவே இல்லை என்று பிரதிவாதிகள் வாதிட்டுள்ளனர். முதல் வாதி, தாமோதரன் மற்றும் சிறுத்தகுட்டியின் மகனாக இருந்தாலும், அவர் சட்டப்படியான

மகனல்ல என்னும் பொருண்மை குறித்த காண்முடிவினை கீழமை நீதிமன்றம் பதிவு செய்தது.

15. ஓர் ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக நீண்டகாலமாகச் சேர்ந்து வாழ்ந்தால், அங்கு திருமணப் பந்தத்திற்கு சாதகமான அனுமானம் இருக்கும் என்பது நன்கு அறுதியிடப்பட்டுள்ளது. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 114-இன்படி அத்தகைய அனுமானம் ஈர்க்கப்படும். அந்த அனுமானம் மறுதலிக்கத்தக்கதாக இருந்தாலும், திருமணம் ஏதும் நடைபெறவில்லை என்பதை மெய்ப்பிப்பதற்கான பெரும் பொறுப்பு சட்டப்படியான உறவுமுறையை முறிக்கக் கோரும் நபரின் மீதே இருக்கும்.

16. *ஆண்ட்ராஹென்னிடிச் டைனோஹமி மற்றும் ஒருவர் -எதிர்- வைஜிதுங்கே லியானாபடாபென்டிச் பாலாஹமி மற்றும் பலர், ஏ.ஐ.ஆர். 1927 பி.சி. 185*-இல் அரசப் பேரவை கீழ்க்காணுமாறு பொது கருத்துரையை வகுத்துரைத்தது:

> "..... ஓர் ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக ஒன்றுசேர்ந்து வாழந்தது நிரூபிக்கப்படுகிறபோது, மாறானது தெளிவாக நிரூபிக்கப்பட்டாலன்றி, அவர்கள், செல்லத்தக்கத் திருமணத்தின் விளைவாகவே ஒன்றாக வாழ்ந்தனர் என்பதையும், திருமண உறவு இல்லாநிலையில் அல்ல என்பதையும் சட்டமானது ஏற்றுக்கொள்ளும்."

17. *மொஹாபத் அலி கான் -எதிர்- முகமது இப்ராஹிம் கான், ஏ.ஐ.ஆர். 1929 பி.சி. 135*-இல் மீண்டும் அரசப் பேரவை கீழ்க்காணுமாறு வகுத்துரைத்தது:

> "ஓர் ஆணும் பெண்ணும் தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக ஒன்றாக இணைந்து வாழ்ந்துள்ளனர் எனும்போது சட்டமானது திருமணத்திற்கு

சாதகமாகவும், திருமணம் செய்துகொள்ளாமல் ஒன்றாக வாழ்வதற்கெதிராகவும் அனுமானிக்கிறது."

18. *பத்ரி பிரசாத் -எதிர்- டெபுடி டைரக்டர் ஆ.ப் கன்சாலிடேஷன் மற்றும் பலர், 1978 (3) எஸ்.சி.சி. 527* எனும் வழக்கில் இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது, வாழ்க்கைத் துணைவர்கள் இருவரும் நீண்டகாலமாக கணவன் மனைவியாக ஒன்றாக வாழ்ந்துவந்தால், திருமணப் பந்தத்திற்கு சாதகமான வலுவான அனுமானம் எழுகிறது; இந்த அனுமானம் மறுதலிக்கத்தக்கதாக இருப்பினும், சட்டப்படியான உறவுமுறையை முறிக்கக் கோரும் நபரின் மீதே பெரும் பொறுப்பு இருக்கிறது. சட்டமானது, முறைப்படியான உறவுக்கு ஆதரவாக இருப்பதுடன், முறையற்ற உறவின்மீது அதிருப்தி தெரிவிக்கிறது.

19. *எஸ்.பி.எஸ். பாலசுப்ரமணியம் -எதிர்- சுருட்டையன் என்கிற ஆண்டாளி படையாச்சி மற்றும் பலர், 1994 (1) எஸ்.சி.சி. 460* எனும் வழக்கில் இந்நீதிமன்றம் தீர்மானித்தது பின்வருமாறு:

"4. இந்நீதிமன்றத்தால் அறுதியிடப்பட்டது யாதெனில், ஓர் ஆணும் பெண்ணும் பல ஆண்டுகளாக கணவன் மனைவியாக ஒன்றாக வாழ்ந்துவந்தால், அவர்கள் இருவருக்கும் இடையேயான திருமணத்தின் சட்ட முறைமை குறித்து அனுமானம் எழுகிறது என்பதாகும். ஆனால், அந்த அனுமானம் மறுதலிக்கத்தக்கதாகும். [காண்க: கோகுல் சந்த் -எதிர்- பர்வீன் குமாரி, ஏ.ஐ.ஆர். 1952 எஸ்.சி. 231 : 1952 எஸ்.சி.ஆர். 825]"

20. *துல்சா மற்றும் பலர் -எதிர்- துர்காதியா மற்றும் பலர், 2008 (1) சி.டி.சி. 773 (எஸ்.சி.) : 2008 (4) எஸ்.சி.சி. 520; செல்லம்மா -எதிர்- திலகா மற்றும் பலர், 2009 (9) எஸ்.சி.சி. 299; மதன் மோகன் சிங் மற்றும் பலர் -எதிர்-*

ரஜினி காந்த் மற்றும் ஒருவர், 2010 (5) சி.டி.சி. 503 (எஸ்.சி.) : 2010 (9) எஸ்.சி.சி. 209 மற்றும் *இந்திரா சர்மா -எதிர்- வி.கே.வி. சர்மா, 2014 (1) எம்.டபிள்யூ.என். (கிரிமினல்) 481 (எஸ்.சி.) : 2013 (15) எஸ்.சி.சி. 755* ஆகியவற்றில் இந்நீதிமன்றத்தால் இதேபோன்ற கருத்துரை எடுக்கப் பட்டுள்ளது.

21. வாதிகளின் கூற்றுப்படி, 1940-ஆம் ஆண்டில் தாமோதரன், சிறுத்தகுட்டியை மணமுடித்தார். எனினும், அவர்களின் திருமணம் குறித்த நேரடிச் சான்றேதுமில்லை. முதல் வாதி-கிருஷ்ணன் 1942-ஆம் ஆண்டில் பிறந்தார். ஆகவே, தாமோதரனுக்கும் சிறுத்தகுட்டிக்கும் இடையேயான கணவன்-மனைவி எனும் உறவுமுறையை நிலைநாட்டுவதற்காக நீண்டகால உடனுறைதலை மெய்ப்பிப்பதற்கு போதுமான சான்று உள்ளதா? என்பதே இம்மேல்முறையீடுகளில் பரிசீலனைக்கு எழும் வினாவாகும்.

22. முதல் வாதி வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டார்; அவருடைய தந்தை-தாமோதரனும், தாயார்-சிறுத்தகுட்டியும் வழக்கு அட்டவணைச் சொத்தில் வசித்ததாக அவர் சாட்சியம் அளித்துள்ளார். அவருக்கு வேலை கிடைத்தபோது அவருடைய தந்தையின் மரணத்திற்குப் பின்னர், வா.சா.1 அவரது தாயாருடன் குடிபெயர்ந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். 1985-ஆம் ஆண்டில் அவரது தாயார் இறக்கும்வரையில் பிரதிவாதிகள் வருமானத்தில் பங்கு கொடுத்துள்ளனர் எனவும் வா.சா.1 குறிப்பிட்டுள்ளார். வா.சா.2 அண்டைவீட்டுக்காரர் ஆவார். அவரது சாட்சியத்தில் காட்டுகண்டி எடத்தில் தாமோதரன் சிறுத்தகுட்டியை மணஞ்செய்துகொண்டதாவும், அவர்கள் காட்டுகண்டி எடத்தில் வீட்டில் கணவன் மனைவியாக வசித்து வந்ததாகவும், அவர்களுக்கு கிருஷ்ணன் எனும் பெயருடைய மகன் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். அவரது

குறுக்கு விசாரணையில் அவர்களின் திருமணத்தில் சடங்குமுறைப்படி சில நபர்கள் கலந்துகொண்டனர் என்றும், சிறுத்தகுட்டி, திருமணத்திற்கு முன்பாகவே காட்டுகண்டி எடத்தில் வீட்டில் இருந்ததாகவும் வா.சா.2 கூறியுள்ளார். சிறுத்தகுட்டி சாலபுரத்தில் வீட்டை வாடகைக்கு எடுத்திருந்ததாகவும், திருமணத்திற்குப் பின்னர் அவர்கள் வாடகை வீட்டில் வசித்ததாகவும், மேலும், அத்திருமணத்தில் தாமோதரனின் சகோதரியும் கலந்துகொண்டதாகவும் வா.சா.2 தெரிவித்துள்ளார். தாமோதரனுக்கும் சிறுத்தகுட்டிக்கும் இடையேயான திருமணம், காதல் திருமணம் என்பதையும் வா.சா.2-இன் சாட்சியம் காண்பிக்கிறது.

23. வாதிகள், முதல் வாதியின் பிறப்புச் சான்றிதழை வா.சா.ஆ.9-ஆக முன்னிலைப்படுத்தியுள்ளனர். இந்த ஆவணத்தின்படி முதல் வாதியின் பிறந்த தேதியானது 12.5.1942-ஆகக் காட்டப்பட்டுள்ளது. கா.எ. தாமோதரன் தந்தை எனவும், சிறுத்தகுட்டி தாயார் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளனர். பி.சா.ஆ.1, பிரதிவாதிகளால் முன்னிலைப் படுத்தப்பட்ட அதே சான்றிதழின் நகலாகும். வா.சா.ஆ.9 மற்றும் பி.சா.ஆ.1-ஐ ஒப்பிட்டுப்பார்த்ததில், பிறப்பிடம் குறித்து வா.சா.ஆ.9-இல் சில திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளதெனத் தெரியவருகிறது. எனினும், இரு ஆவணங்களிலும் முதல் வாதியின் தந்தை மற்றும் தாயாரின் பெயர்கள் ஒரேமாதிரியானவையாக, அதாவது, முறையே கா.எ. தாமோதரன் மற்றும் சிறுத்தகுட்டி என இருப்பது கவனிக்கத்தக்கதாகும். வா.சா.ஆ.2 காப்பீட்டு ஆவணமாகும்; அதில் அவரது வீட்டின் பெயர் காட்டுகண்டி எடத்தில் எனக் காணப்படுகிறது. வா.சா.ஆ.2, 26.4.1966-ஆம் தேதியிடப் பட்டது. வா.சா.ஆ.3, கா.எ. தாமோதரனின் உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழாகும்; அது முதல் வாதியின் வசமிருந்தது. அவர் தாமோதரனின் மகன் என்பதாலேயே

அதனை அவர் வைத்திருந்தார் என்பது முதல் வாதியின் கூற்றாகும். 1.8.1963-ஆம் தேதியிடப்பட்ட வா.சா.ஆ.4, முதல் வாதியின் பெயரில் வழங்கப்பட்ட தொழிற்கல்வி சான்றிதழ் ஆகும். அவர் மஞ்சேரி, ஜூனியர் தொழில்நுட்பப் பள்ளியின் மாணவராக இருந்ததால், அது மாநில தொழிற்கல்வி பயிற்சிக் கழகத்தின் செயலாளரால் வழங்கப்பட்டதாகும். இச்சான்றிதழில் முதல் வாதியின் பெயர் கா. கிருஷ்ணன், த/பெ. திரு. கா.எ. தாமோதரன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வீட்டின் பெயர் சாலபுரம், எடத்தில் வீடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

24. வாதிகள், 16.2.1985-ஆம் தேதியிடப்பட்ட மலையாள மனோரமா நாளிதழ்-வா.சா.ஆ.5-ஐ முன்னிலைப் படுத்தினர். காட்டுகண்டி எடத்தில் தாமோதரனின் மனைவியான 75 வயதுடைய சிறுத்தகுட்டி காலமாகி-விட்டார் என அந்நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது; முதல் வாதியின் பெயர், சிறுத்தக்குட்டியின் மகன் எனக் காண்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6, 1970-ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின் உண்மை நகலாகும். இந்த ஆவணத்தில் சிறுத்தகுட்டி என்ற பெயர், கா.எ. தாமோதரனின் மனைவி எனக் காண்பிக்கப்பட்டுள்ளது. 24.3.1980-ஆம் தேதியிடப்பட்ட வா.சா.ஆ.7, பணியங்கரா கிராம அலுவலரின் முன்பாக முதல் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும். இந்த ஆவணத்தில் முதல் வாதி, தாமோதரனின் மகன் என கிராம அலுவலரால் சான்றளிக்கப்பட்டுள்ளார். அது 24.3.1980-ஆம் தேதியிடப்பட்டது. வா.சா.ஆ.8-ம் முதல் வாதியை தாமோதரனின் மகன் எனக் கிராம அலுவலர் குறிப்பிடும் அதேபோன்ற சான்றிதழாகும். இது 4.5.1979-ஆம் தேதியிடப்பட்டது. 15.12.1985-ஆம் தேதியிடப்பட்ட சிறுத்தகுட்டியின் இறப்புச் சான்றிதழில் (வா.சா.ஆ.10), அவரது கணவரின் பெயர் தாமோதரன் எனக் காணப்படுகிறது. வா.சா.ஆ.11, முதல் வாதியின் வாக்காளர் அட்டையாகும்;

அதில் முதல் வாதி, தாமோதரனின் மகன் என்றும், தாமோதரனின் மனைவி சிறுத்தகுட்டி என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. வாதிகள், 2.11.1983-ஆம் தேதியிடப்பட்ட வாக்காளர் அட்டை (வா.சா.ஆ.12), 7.11.1980-ஆம் தேதியிடப்பட்ட சாதிச் சான்றிதழான வா.சா.ஆ.13, 29.4.1971-ஆம் தேதியிடப்பட்ட வா.சா.ஆ.14-திருமணச் சான்றிதழ் மற்றும் வா.சா.ஆ.15-இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தால் வாதிகளின்பேரில் வழங்கப்பட்ட இரசீது உள்ளிட்ட வேறுசில ஆவணங்களையும் முற்படுத்தியுள்ளனர். முதல் வாதியை இராணுவப் பணியிலிருந்து விடுவித்ததற்கான விடுவிப்புச் சான்றிதழான வா.சா.ஆ.20 ஒரு முக்கியமான ஆவணமாகும்; அதில் அவர் கா.எ. தாமோதரனின் மகன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். வா.சா.ஆ.21 முதல் வாதியின் எஸ்.எஸ்.எல்.சி. புத்தகமாகும்.

25. தாமோதரனின் குடும்பத்திடமிருந்து சிறுத்தகுட்டி சிறிது பணம் பெற்றுக்கொண்டிருந்தார் என்பதைக் காண்பிப்பதற்கு, வெகுகாலத்திற்கு முன்பாக 1976-ஆம் ஆண்டில் குறிப்பாக தாயார்-சிறுத்தகுட்டியால் முதல் வாதிக்கு அனுப்பப்பட்ட கடிதங்களான வா.சா.ஆ.22 மற்றும் வா.சா.ஆ.23 உட்பட போதுமான சான்றுகளும் பதிவில் உள்ளன. விசாரணை நீதிமன்றம், வழக்கின் இந்த அம்சத்தை கீழ்க்காணுமாறு விவாதித்துள்ளது:

> "... காட்டுகண்டி எடத்தில் தாமோதரன் சிறுத்தகுட்டியை மணமுடித்தார் என்பதையும், 1-ஆம் வாதி, தாமோதரனின் மகன் என்பதையும் மெய்ப்பிக்க போதுமான ஆதாரம் உள்ளது. 1985-ஆம் ஆண்டில் சிறுத்தகுட்டி இறக்கும்வரையில் குடும்பச் சொத்திலிருந்து வந்த வருமானத்தைக் குடும்பத்தினர் கொடுத்துவந்தனர் என்பது வாதிகளின் தெளிவான வழக்கு விவரம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1-ஆம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட கடிதங்களான வா.சா.ஆ.22 மற்றும் வா.சா.ஆ.23-ஐ வாதி முற்படுத்தியுள்ளார். வா.சா.ஆ.22-ஐ ஆராய்ந்து பார்த்ததில், அது முதல் வாதிக்கு அவரது தாயார் சிறுத்தகுட்டியால் வெகுகாலத்திற்கு முன்பாக 1976-ஆம் ஆண்டில் அனுப்பப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. உண்மையில் கடிதத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றாலும், ஆவணத்தில் உள்ள முத்திரையிலிருந்து அது 1976-ஆம் ஆண்டில் அஞ்சல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. இக்கடிதத்தில் தாயார் எடத்தில் வீட்டுக்குச் சென்றார் என்று பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 3-ஆம் பிரதிவாதி உமடத்தி எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. அவர் குடும்பத்தாரிடமிருந்து சிறிது பணம் பெற்றுவந்தார் என்பதும் கடிதத்திலிருந்து தெரியவருகிறது. அவர் குடும்பத்தாரிடமிருந்து பணம் பெற்றுவந்தார் என்பதும், 3-ஆம் பிரதிவாதி குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், 3-ஆம் பிரதிவாதியின் மகளான மற்றொரு பிரதிவாதி பி.சா.1, 3-ஆம் பிரதிவாதி உமடத்தி என அழைக்கப்பட்டதை ஒப்புக்கொண்டுள்ளார் என்பதும் வா.சா.ஆ.23-லிருந்து தெரிகிறது, ஆகவே வா.சா.ஆ.22 மற்றும் 23 வாதிகளின் வழக்கை ஆதரிக்கின்றன. 1-ஆம் வாதி இராணுவ சேவையில் இருந்தபோது அவருக்கு அக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அவருக்கு 2-ஆவது குழந்தை பிறந்தபோது, தாயார் அக்கடிதங்களை எழுதியுள்ளார் என்பது தெரியவருகிறது; அதில் 1-ஆம் வாதியின் உடல்நலக்குறைவு குறித்த விசாரணைகளும் உள்ளன என்பது அக்கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது. இக்கடிதங்களைப் பார்வையிட்டதிலிருந்து

ஆவணங்கள் உண்மையானவை என்பதைக் காணமுடிகிறது. பிரதிவாதிகளால் வாதுரைக்கப் பட்டவாறு, வாதிகளால் அவர்களின் வழக்கிற்கு ஆதரவாக அவை உருவாக்கப்பட்டுள்ளன என முடிவுசெய்வது கடினமென நான் காண்கிறேன்."

26. மேற்கண்டவாறு தாமோதரன் மற்றும் சிறுத்தகுட்டியின் திருமணம் 1940-ஆம் ஆண்டில் நடைபெற்றது என்பது வாதிகளின் வாதமாகும். முதல் வாதி 12.5.1942 அன்று பிறந்துள்ளார் என்பது வா.சா.ஆ.9-லிருந்து தெளிவாகத் தெரிகிறது. வாதிகளால் முன்கொணரப்பட்ட ஆவணங்கள், தரப்பினர்களுக்கிடையே பிரச்சினை எழுவதற்கு வெகுமுன்னதாகவே இருந்துவந்தன. தாமோதரனும் சிறுத்தகுட்டியும் கணவன் மனைவியாக நீண்டகாலமாக இணைந்து வாழ்ந்ததை இந்த ஆவணங்களும், அதனுடன் வா.சா.2-இன் சாட்சியமும் காண்பிக்கின்றன. முதல் வாதி, 1963-ஆம் ஆண்டில் இராணுவப் பணியில் இணைந்து 1979-ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றார். அதன்பின்னர், அவர் வழக்கு அட்டவணைச் சொத்தின் பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்கினைத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

27. நாங்கள் பிரதிவாதிகளின் சாட்சியத்தையும் நுண்ணாய்வு செய்துள்ளோம். தாமோதரனும் சிறுத்தகுட்டியும் நீண்டகாலமாக இணைந்து வாழ்ந்ததன் காரணமாக அவர்களுக்கிடையே திருமணத்திற்கு சாதகமான அனுமானத்தை மறுதலிக்க பிரதிவாதிகள் தவறிவிட்டனர் என நாங்கள் கருதுகிறோம். அச்சூழ்நிலையில் விசாரணை நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்புரையை உயர் நீதிமன்றம் நீக்கறவு செய்ததை நியாயப்படுத்தவில்லை.

28. முடிவாக, மேல்முறையீடுகள் வெற்றியடைந்து அதற்கிணங்க அனுமதிக்கப்படுகின்றன; இதில்

கேள்விக்குள்ளான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது; விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்-பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை மீட்டளிக்கப்படுகிறது. தரப்பினர்கள் அவரவர்களின் செலவுகளை அவர்களே ஏற்கும்படி உத்தரவிடப்படுகின்றனர்.

குறிப்பு: 1908-ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை XX, விதி 18-இன் கீழ் இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளைத் தொடங்குவதில் உள்ள தாமதம்

29. நாங்கள், இறுதியாக 1908-ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் (சுருக்கமாக 'c /e/r /') f l | i s XX, விதி 18-இன் கீழ் இறுதிநிலைத் தீர்ப்பாணைகள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதம் என்ற கவலைக்குரிய போக்கினைக் குறித்துக் குறிப்பிடுவது அவசியமெனக் கருதுகிறோம். சொத்தின் பாகப் பிரிவினைக்கான அல்லது அதில் ஒரு பங்கின் தனிப்பட்ட சுவாதீனத்திற்கான உரிமை வழக்குகளில் தீர்ப்பாணைகள் குறித்து இவ்வகையம் கையாள்கிறது. அது கீழ்க்கண்டவாறு வகைசெய்கிறது:

"18. *சொத்தில் பாகப்பிரிவினைக்கான அல்லது அதில் ஒரு பங்கின் தனிப்பட்ட சுவாதீனத்திற்கான உரிமை வழக்கில் தீர்ப்பாணை.-* சொத்தின் பாகப் பிரிவினைக்காக அல்லது அதிலுள்ள ஒரு பங்கின் தனிப்பட்ட சுவாதீனத்திற்காக நீதிமன்றம் ஒரு தீர்ப்பாணை பிறப்பிக்குமிடத்து, அப்போது,-

(1) தீர்ப்பாணையானது, அரசுக்குத் தீர்வை செலுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு நிலச்சொத்து சம்பந்தமாக இருந்தாலும் அவ்வாறு இருக்கும் அளவுக்கும், அந்தத் தீர்ப்பாணை, சொத்தில் அக்கறை கொண்டுள்ள

பல்வேறு தரப்பினர்களின் உரிமைகளை விளம்புதல்வேண்டும்; ஆனால், அத்தகைய விளம்புகைக்கும், 54-ஆவது பிரிவின் வகைமுறைகளுக்கும் இணங்க, ஆட்சியரால் அல்லது இதற்கென அதிகாரமளித்து அனுப்பப்பட்ட ஆட்சியரின் கீழமைந்த அரசிதழ்ப் பதிவுபெற்ற அதிகாரி எவராலும் அத்தகைய பாகப்பிரிவினை அல்லது பிரிவினை செய்யப்படவேண்டும் என்று உத்தரவிடுதல்வேண்டும்;

(2) அத்தகைய தீர்ப்பாணையானது வேறு எந்த அசையாச் சொத்து அல்லது அசையும் சொத்து சம்பந்தப்பட்ட ஒரு தீர்ப்பாணையாக இருந்தாலும், அவ்வாறு இருக்கும் அளவுக்கும் நீதிமன்றமானது மேற்கொண்டு விசாரணை இல்லாமல் பாகப்பிரிவினை அல்லது பிரிவினை வசதியாகச் செய்யப்படமுடியாது என்றால், சொத்தில் அக்கறைகொண்ட பல்வேறு தரப்பினர்களின் உரிமைகளை விளம்பியும் தேவைப்படலாகும் முதல்நிலைத் தீர்ப்பாணையைப் பிறப்பிக்கலாம்."

பிரிவு 2-இன் உட்பிரிவு (2)-ஆனது தீர்ப்பாணையைக் கீழ்க்காணுமாறு வரையறுக்கிறது:

"(2) *"தீர்ப்பாணை"* என்பது அதை இயம்புகின்ற நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், உரிமை வழக்கில் பிரச்சினைக்குரிய விடயங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எதையும் பொறுத்து தரப்பினர்களின் உரிமைகளை அறுதியாக முடிவுசெய்கிற நீதிமுறைத் தீர்மானிப்பின் முறைப்படியான சொல்லமைப்பு என்று பொருள்படும்;

மற்றும் அது முதல்நிலையானதாகவோ இறுதி நிலையானதாகவோ இருக்கும். அது வழக்குரை ஒன்றை நிராகரித்தலையும், 144-ஆவது பிரிவில் அடங்கிய பிரச்சினை எதையும் முடிவு செய்தலை உள்ளடக்குவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும், ஆனால் அது -

(அ) ஒரு கட்டளையின்பேரில் மேல்முறையீடு செய்வதைப்போன்று எந்த நீதிமுறைத் தீர்மானிப்பின்பேரில் மேல்முறையீடு செய்யும் உரிமை இருக்கிறதோ அந்த நீதிமுறைத் தீர்மானிப்பு எதையும் அல்லது

(ஆ) தவறுகைக்காகத் தள்ளுபடி செய்யும் கட்டளை எதையும் உள்ளடக்காது.

விளக்கம்: வழக்கு முழுமையாகத் தீர்வு செய்யப்படுவதற்கு முன்பாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருக்கும்போது ஒரு தீர்ப்பாணையானது முதல்நிலையானதாகும். அது, அத்தகைய நீதிமுறைத் தீர்மானிப்பு உரிமை வழக்கை முழுமையாகத் தீர்க்கும்போது அறுதியானதாகும். அது, பகுதி முதல்நிலையானதாகவும், பகுதி அறுதியானதாகவும் இருக்கலாம்;"

30. முதல்நிலைத் தீர்ப்பாணையானது, பாகப் பிரிவினைக்கான தரப்பினர்களின் உரிமைகளை அல்லது பங்குகளைக் குறித்து விளம்புகை செய்கிறது என்பது மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாகிறது. பங்குகள் விளம்புகை செய்யப்பட்டதும், சொத்தினை உண்மையில் பாகப்பிரிவினை செய்வதற்கும், பிரிக்கப்பட்ட சொத்தில் தரப்பினர்களை தனிப்பட்ட உடைமையில் வைப்பதற்கும் மேற்கொண்டு விசாரணை நடத்தப்படவேண்டியிருந்தால்,

அத்தகைய விசாரணை நடத்தப்படவேண்டும்; அவ்விசாரணையின் முடிவினைத் தொடர்ந்து இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படவேண்டும். இவ்வாறு முதல்நிலை மற்றும் இறுதிநிலைத் தீர்ப்பாணைக்கு இடையேயான அடிப்படை வேறுபாடு யாதெனில்: முதல்நிலைத் தீர்ப்பாணையானது தரப்பினர்களின் உரிமைகளையும், பங்குகளையும் குறித்து மட்டுமே விளம்புகை செய்கிறது, மேலும் அது, முதல்நிலைத் தீர்ப்பாணையில் வழங்கப்பட்ட உத்தரவுகளைத் தொடர்ந்து, மேற்கொண்டு செய்யப்பட வேண்டிய மற்றும் நடத்தப்படவேண்டிய விசாரணைக்கு இடமளிக்கிறது; விசாரணை நடத்தப்பட்டு, தரப்பினர்களின் உரிமைகள் இறுதியாக முடிவு செய்யப்பட்ட பின்னர் அம்முடிவுகளை உள்ளடக்கிய ஓர் இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்கப்படவேண்டியதாகும்.

31. இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகள் எந்தக் காலத்திலும் தொடங்கப்படலாம். இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு காலவரையறை ஏதுமில்லை. உரிமை வழக்கில் உள்ள இரு தரப்பினரில் எவரேனும் ஒரு தரப்பினர் இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்குவதற்கான விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யலாம், மேலும், பிரதிவாதிகளில் எவரும் அந்நோக்கத்திற்காக விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யலாம். முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிப்பதனால் மட்டுமே உரிமை வழக்கு தீர்வு செய்யப்பட்டுவிடாது. [பார்க்க: *ஷப் கரண் பூப்னா -எதிர்- சீதா சரண் பூப்னா, 2009 (9) எஸ்.சி.சி. 689; பிமல் குமார் மற்றும் ஒருவர் -எதிர்- சகுந்தலா தேபி மற்றும் பலர், 2012 (2) சி.டி.சி. 881 (எஸ்.சி.) : 2012 (3) எஸ்.சி.சி. 548*]

32. இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு காலவரையறை ஏதுமில்லாததால்,

வழக்காடுபவர்கள் இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு தங்களுக்கு ஏற்ற காலத்தை எடுத்துக்கொள்ள முனைகின்றனர். சில மாநிலங்களில், தற்போதைய வழக்கைப்போன்று நீதிமன்றங்கள் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பித்த பின்னர் இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தரப்பினர்களுக்கு உரிமையளித்து, உரிமை வழக்கினை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கின்றன. வேறுசில மாநிலங்களில் கட்டளை 20, விதி 18-இன் கீழ் புதிய இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகள் தொடங்கப் படுகின்றன. எனினும், தரப்பினர்களின் உரிமைகளை, ஒரு வழக்கு நடவடிக்கையில் விளம்புகை செய்வதும், பரிகாரத்தை மதிப்பீடு செய்து உறுதி செய்வதற்காக தனி வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்குமாறு கோருவது அர்த்தமற்றது என்பதால், இந்நடைமுறை ஊக்குவிக்கப்படக் கூடாது. இது தீர்ப்பாணையின் பலன்களைக் கைவரப்பெறுவதில் தாமதத்தையே ஏற்படுத்தும். இந்நீதிமன்றம், (மேற்படி) *ஷப் கரண் பூப்னா* எனும் வழக்கில் இது தொடர்பான நடைமுறையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதோடு, உ.ந.ச.-இல் உரிய திருத்தம் மேற்கொள்ளுமாறு பரிந்துரைத்தது. 23 முதல் 29 வரையிலான பத்திகளில் இந்நீதிமன்றத்தின் விவாதமாவது:

> "பொது விவாதத்திற்கான மற்றும் சட்டப்படியான நடவடிக்கைக்கான பரிந்துரை:
>
> 23. ஒரு நூற்றாண்டு பழமைவாய்ந்த உரிமையியல் நடைமுறைச் சட்டமானது, தீர்ப்புரைகள், தீர்ப்பாணைகள், முதல்நிலைத் தீர்ப்பாணைகள், இறுதிநிலைத் தீர்ப்பாணைகள் மற்றும் தீர்ப்பாணைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றைக் குறித்து கருத்துரைக்கிறது. அவை தீர்ப்பாணைக்கும்

நிறைவேற்றுதலுக்கும் இடையே ஒரு "சிறு இடைவெளி" அளிக்கின்றன. முதல்நிலைத் தீர்ப்பாணைக்கும், இறுதிநிலைத் தீர்ப்பாணைக்கும் இடையே நடைமுறையில் "சிறு இடைவெளியும்" தோற்றுவிக்கப் பட்டுள்ளது. முதல்நிலைத் தீர்ப்பாணையில் அடங்கியுள்ள விளம்புகையுடனோ, தீர்ப்பாணை-யுடனோ தன்னிச்சையாக இணங்கிச் செயல்பட பிரதிவாதியை இயல்விப்பதற்காகவே "சிறு இடைவெளி" உள்ளது. பொதுவாக நிறைவேற்றுதல் நடவடிக்கைகள் இல்லாமல் தீர்ப்பாணைகளுடன் பிரதிவாதிகள் கீழ்ப்படிவதில்லை என்பது அடிப்படை உண்மையாகும். ஒருசில நேர்வுகளில் மட்டுமே பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்கின் பிரதிவாதிகள், முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கப்பட்டதும் தன்னிச்சையாகவே சொத்தினைப் பாகப்பிரிவினை செய்கின்றனர். ஒருசில நேர்வுகளில் மட்டுமே பணஞ்சார்ந்த வழக்குகளில் உள்ள பிரதிவாதிகள் தீர்ப்பாணைகளின்படி தீர்ப்பாணைத் தொகையைச் செலுத்துகின்றனர். அதன்விளைவாக, இரண்டாவது கட்டத்திற்குச் செல்வது அவசியமாகும்; அதாவது, பெரும்பாலான வழக்குகளில் நிறைவேற்றம் செய்யவும் அல்லது இறுதிநிலைத் தீர்ப்பாணைக்காக விண்ணப்பித்து அதைத்தொடர்ந்து நிறைவேற்றம் செய்வதுமாகும்.

24. பரிகாரத்தைக் கோரி நீதிமன்றத்திற்கு வரும் வழக்காடுபவர் அவரது வழக்கினை நிலை-நிறுத்துவதில் வெற்றியடைகிறபோது, வெறும் தீர்ப்பாணைத் தாளினைப் பெற்றுக்கொள்வதை விரும்புவதில்லை. அவருக்கு வேண்டியது பரிகாரமாகும். அது பணத்திற்கான உரிமை வழக்காக இருந்தால், அவருக்கு பணம் வேண்டும். அது, சொத்திற்கான

உரிமை வழக்காக இருந்தால், அவருக்கு சொத்து வேண்டும். பொதுவாக, அவர் பணத்தை மீளப்பெறுவதற்கான உரிமை வழக்கினைத் தாக்கல் செய்யும்போது, முதலில் வழக்குரைஞரை அமர்த்திக்-கொண்டு தீர்ப்பாணையைப் பெற்று, அதன்பின்னர், ஏன் மீண்டும் வழக்குரைஞரை அமர்த்திக்கொண்டு தீர்ப்பாணையை நிறைவேற்றவேண்டும்? என அவர் வியப்படைகிறார். அதுபோலவே அவர் பாகப் பிரிவினைக்கான உரிமை வழக்கினைத் தாக்கல் செய்யும்போதும் ஏன் முதலில் முதல்நிலைத் தீர்ப்பாணையைப் பெற்று, அதன்பின் விண்ணப்பம் தாக்கல் செய்து இறுதிநிலைத் தீர்ப்பாணையைப் பெற்றதும், உண்மையான பரிகாரத்தைப் பெறுவதற்காக நிறைவேற்றுதல் மனுவை எதற்காக தாக்கல் செய்யவேண்டும்? என வியப்படைகிறார். பகுத்தறிவான கேள்வி யாதெனில்: அது ஏன் தொடர்ச்சியான செயல்-முறையாக இல்லை? என்பதாகும். வழக்காடுபவர் பணம் தொடர்பான தீர்ப்பாணை வழங்கப்படுகிறபோது நீதிமன்றம் ஏன் பணம் செலுத்துவதற்கான நாளை நிர்ணயிப்பதில்லை? என்றும், அது செலுத்தப்படா-விட்டால், ஏன் அதனை நிறைவேற்ற முனைவதில்லை? என்றும், பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்கில் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும்போது நீதிமன்றம், காலந்தாழ்த்தாமல் சொத்தினைப் பிரிப்பதற்கும், ஆணையரை நியமித்து, இறுதிநிலைத் தீர்ப்பாணையை வழங்கி வழக்காடுபவருக்கு அவரது பிரிக்கப்பட்ட பங்கின் உண்மையான உடைமையை ஒப்படைக்க ஏன் ஒரு நாளை நிர்ணயிப்பதில்லை? என்றும் குழப்பமடைகிறார். அவருக்கு ஏன் வெவ்வேறு கட்டங்களில் நீதிமன்றத்தை அணுகி, நீதிமன்றத்திற்கு நினைவூட்டவேண்டிய அவசியம் உள்ளது?

25. உரிமை வழக்குகளை, முதல்நிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகள், இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகள் மற்றும் நிறைவேற்றும் நடவடிக்கைகள் எனச் செயற்கையாகப் பிரிப்பதன் காரணமாகவே பல விசாரணை நீதிபதிகள், உரிமைகளைத் தீர்மானிப்பதே நீதித்துறையின் பணி என்றும், அவர்கள் அப்பகுதியின்மீதே கவனம் செலுத்தவேண்டும் என்றும் நம்புகிறார்கள். அதன்காரணமாக, அமைச்சுப் பணிகளாகக் கருதப்படும் இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கை-களுக்கும், நிறைவேற்றுகை நடவடிக்கைகளுக்கும் போதுமான முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. வழக்காடுபவருக்கு பரிகாரம் கிடைப்பதை உறுதி செய்வதற்கு மாறாக, வழக்குகளை தீர்வு செய்வதிலேயே கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால், வழக்குகளை விரைந்து தீர்வு செய்வதில் மட்டுமே கவனங்கொள்ளாமல், தரப்பினர் விரைவாகவும், சுலபமாகவும் பரிகாரம் பெறுவதற்காகவே நீதிமன்றத்தை அணுகுகின்றனர் என்பதிலும் கவனஞ்செலுத்த வேண்டும். வழக்குரைஞர்களின் மத்தியிலுங்கூட தீர்ப்பாணையைப் பெறுவதற்கு மட்டுமே முக்கியத்துவம் தரப்படுகிறதே தவிர, பரிகாரத்தைப் பெறுவதற்கு அல்ல. வழக்குரைஞர்கள் பலரும் முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கப்படும்வரையில் மட்டுமே உரிமை வழக்குகளைக் கையாண்டு, பின்னர் இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களின் இளநிலையர்களிடம் வழக்கினை ஒப்படைத்துவிட்டு, அதன்பின் நிறைவேற்றுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள அதை அவர்களின் எழுத்தர்களிடம் ஒப்படைத்துவிடுகின்றனர்.

26. பெரும்பாலும் ஒரு தரப்பினர் முதல்நிலைத் தீர்ப்பாணையைப் பெறுவதற்குள்ளாகவே அவரது நிதியையும், ஆற்றலையும் இழந்துவிடுகிறார்; மேலும், இறுதிப் பரிகாரத்தைப் பெறுவதற்கு வழக்கினை மேற்கொண்டு தொடர அவருக்கு திறனோ, ஆற்றலோ இருப்பதில்லை. அதன்விளைவாக, ஓர் உரிமை வழக்கில், ஒன்று அல்லது இரண்டாண்டுகளுக்குள் தீர்ப்பாணையிடப்படுகிறவிடத்து அல்லது முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கப்படுகிறவிடத்து, இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகள் மற்றும் நிறைவேற்றுதல் முடிவடைவதற்கு பல ஆண்டுகள் ஆகிவிடுகிறது. இதுவே கணிசமான தாமதத்திற்கும், அதன்விளைவாக உரிமையியல் நீதித்துறை அமைப்பின்மீது நம்பகத் தன்மையை இழப்பதற்கும் வழிவகுக்கின்ற அம்சமாக உள்ளது. நீதிமன்றங்களும், வழக்குரைஞர்களும் முதன்மை உரிமை வழக்குகளுக்கு அளிப்பதுபோன்ற அதிக முக்கியத்துவத்தை இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளுக்கும் நிறைவேற்றத்திற்கும் அளிக்கவேண்டும்.

27. தற்போதைய அமைப்புமுறையில் பாகப் பிரிவினைக்கான முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும்போது வாதி தீர்ப்பாணையின் பலன்களைப் பெறுவார் என்பதற்கு உத்தரவாதம் ஏதுமில்லை. வழக்காடுபவரின் சிரமங்கள் ஒரு தீர்ப்பாணையைப் பெறும்போதிலிருந்து தொடங்கு-கிறது என்பது அரசப் பேரவையின் புகழ்பெற்ற கருத்துரையாகும். ஒரு தரப்பினருக்கு பரிகாரமானது கிடைக்காதவரையில் உரிமை வழக்கில் பெறும் வெற்றி என்பது அவருக்கு ஒன்றுமே இல்லை என்பதைக் கவனத்திற்கொள்ளவேண்டும். ஆகவே,

சட்டத்தின் வகைமுறை, தரப்பினரை, தீர்ப்பாணையை விரைந்து பெறுவதற்கு மட்டுமின்றி பரிகாரத்தை விரைந்து பெறுவதற்கும் இயல்விக்கவேண்டும் என்பதே உண்மையில் அர்த்தமுள்ளதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் இருக்கும். இதற்கு உரிமையியல் வழக்குகள் தொடர்பான கருத்தியலில் மாற்றம் தேவைப்படுகிறது; அதன்மூலம் உரிமை வழக்குகளைத் தீர்வு செய்வதோடன்றி, வழக்காடுபவருக்கு பரிகாரம் பெற்றுத்தருவதும் வலியுறுத்தப்படுகிறது.

28. சட்ட ஆணையமும், பாராளுமன்றமும் இப்பிரச்சினையின் மீது கவனத்தைச் செலுத்தி, உரிய பரிந்துரைகள்/திருத்தங்கள் செய்யும் எனவும், இதன்மூலம், வழக்கானது தொடக்கநிலையிலிருந்து உண்மையான பரிகாரம் பெறும் நிலைவரையில் தொடர்ச்சியான செயல்முறையாக இருக்கும் எனவும் நாங்கள் நம்புகிறோம்.

29. உரிமையை, விளம்புகை செய்வதற்காக ஒரு நடவடிக்கை, பரிகாரத்தை வரையறுப்பதற்காக அல்லது நிர்ணயிப்பதற்காக ஒரு தனி நடவடிக்கை மற்றும் பரிகாரத்தைப் பெறும் தீர்ப்பாணையைச் செயற்படுத்துவதற்காக மற்றொரு தனி நடவடிக்கை என்பதான இந்த அமைப்புமுறை தற்போதைய தேவைகளுக்குப் பொருந்தாததும், பயனற்றதுமாகும். இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளுக்கு தனித்தனி எண்களை ஒதுக்கும் நடைமுறை உள்ளதால், அது தவிர்க்கப்படவேண்டும். பிரதிவாதி-களுக்கு ஒவ்வொரு கட்டத்திலும் புதிய அறிவிப்புகளை அனுப்புவதும் தவிர்க்கப்படவேண்டும். உரிமையியல் நடைமுறைச் சட்டமானது உரிமை வழக்கினைத்

தாக்கல் செய்யும் நிலையிலிருந்து பரிகாரம் பெறும் நிலைவரையில் தொடர்ச்சியானதும் தடையற்றதுமான நடைமுறையை வகைசெய்யவேண்டும்."

33. விசாரணை நீதிமன்றத்தால் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டால், நீதிமன்றமானது இறுதிநிலைத் தீர்ப்பாணையைப் பிறப்பிப்பதற்கு தன்னிச்சையாகவே வழக்கினை மேல்நடத்தவேண்டும் என நாங்கள் கருதுகிறோம். முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கப்பட்ட பின்னர், விசாரணை நீதிமன்றம் உ.ந.ச., கட்டளை 20, விதி 18-இன் கீழ் நடவடிக்கைகள் எடுப்பதற்கு வழக்கினைப் பட்டியலிடவேண்டும். நீதிமன்றங்கள் தற்போதைய வழக்கில் செய்யப்பட்டுள்ளதைப்போன்று வழக்கினை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கக்கூடாது. இறுதிநிலைத் தீர்ப்பாணை நடவடிக்கைகளைத் தனியாகத் தாக்கல் செய்யவேண்டிய அவசியமும் இல்லை. நீதிமன்றம், அதே உரிமை வழக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிப்பதற்கான உரிய விண்ணப்பத்தைத் தாக்கல் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்கப்படும் போதுதான் உரிமை வழக்கு முடிவுக்கு வரும் என்பதைக் குறிப்பிடவேண்டிய அவசியமில்லை. எனவே, விசாரணை நீதிமன்றங்கள், சொத்தின் பாகப்பிரிவினைக்காகவும், தனிப்பட்ட உடைமைக்காகவும் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட உடனேயே உ.ந.ச.-இன் கட்டளை 20, விதி 18-இன் கீழ் நடவடிக்கைகள் எடுப்பதற்காக தனித்தனி வழக்கு நடவடிக்கைகள் எவற்றையும் தொடங்குமாறு வேண்டுறுத்தாமல், தன்னிச்சையாகவே வழக்கினைப் பட்டியலிடவேண்டும் என நாங்கள் உத்தரவிடுகிறோம்.

34. நாங்கள் இத்தீர்ப்புரையின் நகலை அனைத்து உயர் நீதிமன்றங்களின் தலைமைப் பதிவாளர்களுக்கும்

அனுப்பிவைக்குமாறு இந்நீதிமன்றத்தின் பதிவாளர் அலுவலகத்திற்கு உத்தரவிடுகிறோம். அவர்கள், இத்தீர்ப்புரையின் '33'-ஆவது பத்தியிலுள்ள உத்தரவுகளை அவரவர் மாநிலங்களில் உள்ள சம்பந்தப்பட்ட விசாரணை நீதிமன்றங்களுக்கு அனுப்பிவைக்கும்படி உத்தரவிடப்படுகின்றனர்.

♦🖃♦🖃♦🖃♦

இந்திய உச்ச நீதிமன்றம்

2022-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. பி.ஆர். கவய்
மற்றும்
மாண்புமிகு நீதியரசர் திரு. சி.டி. ரவிகுமார்

குற்றவியல் மேல்முறையீடு எண் 1757/2022
(சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண் 8882/2015-லிருந்து எழுகிறது)

லாலன்குமார் சிங்
மற்றும் பலர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

மகாராஷ்டிர மாநில அரசு ... எதிர்மேல்முறையீட்டாளர்

1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம்; பிரிவு 204 - இவ்வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான போதிய காரணங்கள் உள்ளனவா? இல்லையா? என்பதைக் குறித்து நடுவர் தனது சிந்தையைச் செலுத்தவேண்டும் - அவ்வாறான கருத்துருவாக்கம் குறித்து உத்தரவிலேயே குறிப்பிடப்படவேண்டும் - எதிரிக்கு எதிராக முகாந்திரம் உள்ளது என்ற முடிவுக்கு வருகையில், அதில் காரணங்கள் ஏதும் அளிக்கப்படவில்லையெனில், அவ்வுத்தரவு நீக்கறவு செய்யப்படுவதற்குரியதாகும் - அவ்வுத்தரவில் விரிவான